145



# தொட்டியம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை

## பிறப்பிப்பவர் : திருமதி. வெ. பிரகந்தநாயகி.

ந.க.எண்.அ1/ 602 /2023 நாள் 03.01.2024

பொருள் :– குடியிருப்பு மனைப்பிரிவு – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சி – தொட்டியம் கிராமம் புல எண் 74/1A1 மற்றும் 74/1Bல் 3.50 ஏக்கர் 14163.88 ச.மீபரப்பளவில் அமைய உள்ள குடியிருப்பு மனைப் பிரிவிற்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் /உறுப்பினர் செயலர் அவர்களால் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டதற்கு – தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சியால் **இறுதி ஒப்புதல்அளித்து ஆணையிடப்பட்டது.**

பார்வை

1) இணை இயக்குநர் , நகர்ஊரமைப்புத்துறை , Town and Country Planing Department(PlaningPermission)KajamalaiMainRoad , திருச்சிராப்பள்ளி மாவட்டம், அவர்களின் கடிதம் ROCNo.C10A943Z/2023/ TCP Date19.10.2023உடன்இணைத்துபெறப்பட்ட இம்மனைப்பிரிவிற்கான வரைபடம் ம.வ/ந.ஊ.இ (தி.ம) எண் 134/2023என எண்ணிடப்பட்டது. (இணையதளவழியில் வரப்பெறப்பட்டது.)
2) அரசாணை எண் 138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 04.06.2004.
3) அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 04.05.2017.
4) அரசாணை எண் 18 நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16 நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020
5) அரசாணை எண் 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 23.09.2020
6) அரசாணை எண் 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 09.12.2020
7) திரு. சீ. சுரேஷ், த/பெ. சீனிவாசன் – 1, வடுகத்தெரு , தொட்டியம் மற்றும் திருமதி . த. கவிதா,க/பெ. தனபால், –2, காட்டுப்புத்தூர் மெயின் ரோடு, பாலசமுத்திரம், தொட்டியம் ஆகிய இருவரால் வழங்கப்பட்டுள்ள ஆவண பத்திர நகல்கள்
8) முசிறி சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நன்கொடை ஏற்பாட்டு ஆவணபதிவுஎண்4773/2023நாள்09.10.2023 (இம்மனைப்பிரிவுக்கான பூங்கா , சாலைகள் , மூலை முடக்குகள் , பொது உபயோகம் )
9) இவ்வலுவலக இதே ந.க.எண்ணிட்ட கடிதம் நாள் 03.11.2023, 14.12.2023 மற்றும் 15.12.2023
10) சார்பதிவாளர் , சார்பதிவாளர் அலுவலகம், முசிறி அவர்களின் கடிதம் ந.க.எண் 539/2023 நாள் 18.11.2023
11) தொட்டியம் வட்டாட்சி அவர்களின் கடிதம் மூ.மு. எண் அ2/5254/2023 நாள் 24.11.2023 (தடையின்மை சான்று)
12) உதவி பொறியாளர் , தமிழ்நாடு மின்உற்பத்தி பகிர்மான கழகம் தொட்டியம் LR No AE/JE/O&M / Tym / F. A.P.P Tracking / D.No 294/2023 Date 06.12.2023..
13) தமிழ்நாடு மின்உற்பத்தி பகிர்மான கழகம் தொட்டியம் இரசீது எண் TRM296RS1D1282 நாள் 15.12.2023.
14) இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண் 356 நாள் 29.12.2023.
15) தொடர்புடைய ஆவணங்கள்.

*****************

ஆணை

பார்வை 2 முதல் 8 முடிய படிக்கப்பட்டவைகளின்படி திருச்சிராப்பள்ளி மாவட்டம் , தொட்டியம் வட்டம், தொட்டியம் கிராமம் புல எண்கள் தொட்டியம் கிராமம் புல எண் 74/1A1 மற்றும் 74/1Bல் 3.50 ஏக்கர் 14163.88 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில்

திரு. சீ. சுரேஷ், த/பெ. சீனிவாசன் – 1, திருமதி . த. கவிதா,க/பெ. தனபால் – 2 தொட்டியம் என்பவர்களுக்கு சொந்தமான இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர்மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம், அவர்களால் பார்வை 1 ல் காணும் கடிதத்தில்தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு நிபந்தனைகளுடன் கூடிய வரைபடத்திற்கும.வ/ந.ஊ.இ.இ (தி.ம) எண் 134/2023 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்பஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த மனைப்பிரிவுக்குட்பட்ட இடம் குறித்து பார்வை 7–ல் காணும் தொட்டியம் வட்டாட்சியர் அவர்களால் தடையின்மை சான்று வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மனைப்பிரிவுதாரர்களிடமிருந்து கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் அரசு தலைப்பிலும், பேரூராட்சியின் கணக்கிலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைப்பிலும் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தலைப்பில் செலுத்தியது**

| | | |
|---|---|---|
| சந்தை மதிப்பில் 3% தொகை | – | ரூ. 52,500 /– |
| **தெருவிளக்கு வசதி ஏற்படுத்திட** | | |
| மின்சார வாரியத்திற்கு செலுத்தியது | – | ரூ.2,57,260/– |
| **பேரூராட்சி கணக்கில் செலுத்தியது** | | |
| கூர்ந்தாய்வு கட்டணம் – 72 மனைகள் | – | ரூ. 72,000/– |
| ஆய்வு கட்டணம் | – | ரூ. 5,000/– |
| **காலியிட மனைவரி ஒருஅரை ஆண்டிற்கு** | – | ரூ. 34,832/ |

பார்வை 14 ல் காணும் தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சி மன்ற தீர்மானம் எண் 356 நாள் 29.12.2023 – ல் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதை தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்பு துறை இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், அவர்களின் பார்வை 1 ல் காணும் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குப்பட்டு **இக்குடியிருப்புமனைப்பிரிவு மற்றும் வரைபடத்திற்கு இறுதி ஒப்புதல் அளித்து இதன் வழி ஆணையிடப்பட்டது.**

இந்த மனைப்பிரிவு இடம் தற்போது வார்டு எண் 03 கொசவம்பட்டி வடக்கு தெரு **கிரீன்லேண்ட் அவென்யூ (ஏசிடி நகர்வடபுறம்)** என பெயரிடப்பட்டுள்ளது.

**<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்.</u>**

| | | |
|---|---|---|
| 1. மனைப்பிரிவின் பரப்பளவு | – | 3.50 ஏக்கர் (14163.88ச.மீ) |
| 2. மனைப்பிரிவின் சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் மொத்தப்பரப்பளவு | | |
| தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தின்படி | – | 3373.48 ச.மீ |
| நன்கொடை ஏற்பாட்டு ஆவண பதிவின்படி | – | 3394.09 ச.மீ |
| 3. மனைப்பிரிவின் சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பு நீங்கலாக மனைப்பிரிவின் பரப்பளவுவரைபடத்தின்படி | – | 10790.40 ச.மீ |
| 4. கோரிய மனைகள் | – | 72 |
| 5. ஒதுக்கிய மனைகள் | – | 72 |

**நலிவடைந்தோர் பிரிவினர் மற்றும் மனைகளுக்கான விபரம்.**

நலிவடைந்தோர் பிரிவினர் மொத்த மனைகள் – 21

மனை எண் 1 முதல் 21 வரையிலும்

நலிவடைந்தோர் மனைகளின் மொத்த பரப்பளவு – 1183.99 ச.மீ 10.97 %

(வரைபடத்தின்படி )

**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்புசெய்யப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| பூங்கா (வரைபடத்தின்படி ) | – | 1100.31 ச.மீ | 10.19 % |
| **பொது உபயோகம்** | – | 56.42 ச.மீ | 0.52% |
| தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது ஒப்படைக்க வேண்டியது **(For TANGEDCO)** | – | 56.42 ச.மீ | 0.52% |

147



## மனைப்பிரிவு நிபந்தனைகள்.

1. I) மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு திருச்சிராப்பள்ளி நகர் ஊரமைப்பு துறையால் ம.வ/ ந.ஊ .உ. இ (தி.ம) எண் 134/2023 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.

   II)நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் மற்றும் அளவுகள் பொது ஒதுக்கீடுகளில் அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இருசாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள (Splay) திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒருமனையையும் விற்கவோ, குத்ததைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகள் குடியிருப்பு வீடுகட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் , மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR- 2019 ல் குறிப்பிடப்பட்டுள்ள Residential Use - ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன்அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியில் அனுமதி பெற வேண்டும்.
5. மனையின் ஊடே குறைந்த மின்அழுத்த / உயர் மின்அழுத்த மின்கம்பி பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பி பாதை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்து உள்ளவாரோ மனுதாரர்கள் தமது சொந்த செலவில் மாற்றி அமைக்க வேண்டும்.
6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெருமட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும், நிழல்தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்ததடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் இருபுறமும் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.
8. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் அரசு விதிமுறைகளின்படி நகர் ஊரமைப்பு துறை / பேரூராட்சியிடம் அனுமதி பெற வேண்டும்.
9. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்பட்டது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைபிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கான எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.
10. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலினைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission/ Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission/ Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால்ரத்து செய்யயப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி இப்பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ள இறுதி ஒப்புதலும் ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.
11. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6X4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
12. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல், மற்றும் இப்பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ள இறுதி ஒப்புதல் ஆணை நகல்களை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

13. இம்மனைப்பிரிவு பகுதிக்கு இம்மனைப்பிரிவுதாரர்களாகிய தங்களது சொந்த பொறுப்பில் தேவையான குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.
14. இந்த இறுதி ஒப்புதல் ஆணை இக்குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 72 மனைகளுக்கு மட்டுமே பொருந்தும். இதன் அருகாமையில் உள்ள எவ்விதமான மனைகளுக்கும் பொருந்தாது.

**இணைப்பு – இறுதி ஒப்புதல் வரைபடம் – 1.**

செயல் அலுவலர், 3.1.24
தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சி
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

**பெறுதல்.**

3/1/24

திரு. சீ. சுரேஷ், த/பெ. சீனிவாசன் – 1,
வடுகத்தெரு , தொட்டியம் (மற்றும்)
திருமதி . த. கவிதா,க/பெ. தனபால், – 2,
காட்டுப்புத்தூர் மெயின் ரோடு.
பாலசமுத்திரம், தொட்டியம்

நகல் .
1. இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் , மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. சார்பதிவாளர் , சார்பதிவாளர் அலுவலகம் , முசிறி ( மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் இறுதி ஒப்புதல் வரைபடத்துடன் தொடர் நடவடிக்கைக்காக)
3. உதவி இயக்குநர், (நில அளவை) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களின் தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. வட்டாட்சியர் , (நில அளவை பிரிவு ) வட்டாட்சியர் அலுவலகம் தொட்டியம் அவர்களின் மேல்நடவடிக்கைகாக ( இறுதி ஒப்புதல் வரைபடத்துடன் பொது ஒதுக்கீடுகள் சம்மந்தப்பட்டஅரசு அலுவலகங்கள் பெயரில் தனி பட்டா மாற்றம் செய்திடும் பொருட்டு )




## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
## திருச்சிராப்பள்ளி மாவட்டம்

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டம், தொட்டியம் தேர்வு நிலை பேரூராட்சி, தொட்டியம் கிராமம், சர்வே எண் : 74/1A1 மற்றும் 74/1B –ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.**

கோப்பு எண் : CIOA943Z / 2023 / தி.மா.2

அளவு :– 1 : 800 (1 அங்குலம் = 66 அடி)

வ

**குறிப்புகள் :**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் பரப்பளவு | : | 3.50 ஏக்கர் (14163.88 சதுர மீட்டர்) |
| மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பு | : | 3373.48 சதுர மீட்டர் |
| மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் நீங்கலாக மனைப்பிரிவின் பரப்பு | : | 10790.40 சதுர மீட்டர் |
| கோரிய மனைகள் | : | 72 |
| ஒதுக்கிய மனைகள் | : | 72 |
| மனைப்பிரிவு எல்லை | | |
| நிலையிலுள்ள சாலை | | |

**நலிவடைந்தோர் பிரிவினர் மற்றும் மனைகளுக்கான விபரம் :**

நலிவடைந்தோர் பிரிவினர் மொத்த மனைகள் : 21

மனை எண் : 1 முதல் 21 வரையிலும்

நலிவடைந்தோர் மனைகளின் மொத்தப் பரப்பளவு = 1183.99 சதுர மீட்டர் = 10.97 %

**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட வேண்டியவை :**

பூங்கா : 1100.31 சதுர மீட்டர் – 10.19 %

மனைப்பிரிவு சாலைகள்

பொது உபயோகம் : 56.42 ச. மீட்டர் =0.52 %

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்க வேண்டியது (TANGEDCO): 56.42 ச. மீட்டர் =0.52 %

**கட்டிட வரம்பு :**

**7.2 மீட்டர் சாலைகளுக்கு 1.50 மீட்டர் மற்றும் 7.2 மீட்டர் மேல் உள்ள சாலைகளுக்கு 3.0 மீட்டர் விடப்பட வேண்டும்.**

**மூலை முடக்கு :**

**7.2 மீட்டர் வரை உள்ள சாலைகளுக்கு 1.50 மீட்டர் x1.50 மீட்டர் விடப்பட வேண்டும்.**

**7.2 மீட்டர் மேல் 12.0 மீட்டர் வரை உள்ள சாலைகளுக்கு 3.0 மீட்டர் x3.0 மீட்டர் விடப்பட வேண்டும்.**

**நிபந்தனைகள்**

1) இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடத்தில் எவ்வித நில ஆர்ஜித நடவடிக்கையும் இல்லை என்பதையும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட அலுவலரால் பெறப்படவில்லை என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2) அரசாணை எண்: 134 ந.நி.(ம)கு.வ. துறை நாள்: 20.09.2002 -ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சியினால் வழங்கப்படும் சான்றின் அடிப்படையிலேயே இம்மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

3) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

4) விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6' X 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

6) உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

7) The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

**ம.வ. /ந.ஊ.உ.இ.( தி.ம ) எண் :134 / 2023**

(இணையதள ஒப்புதல்)

/ இ.சைன் செய்யப்பட்டது /

இணை இயக்குநர்(மு.கூ.பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

Signature valid

க.கோபாலன்
வரைவாளர் நிலை-3

ஆ.பெ.தமிழ்வாணன்
மேற்பார்வையாளர்

5 நகல்